# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 27.12.2022 ந் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண். 320**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண். 321**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் நவம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண். 322**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் நவம்பர் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது, மன்றத்தீர்மான எண். 323**

5. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 26 கடைகளுக்கு 23.11.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

   1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.
   2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
   3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
   4. வாரச்சந்தை கடை எண். 31
   5. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைக்கு கிழபுறம் மேற்கு பார்த்த கடைகளுக்கு பின்புறம் கிழக்கு பார்த்த கடை எண். 13, 19
   6. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 54
   7. பழைய பேருந்து நிலையம் MUDF கடை எண். 47

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி ஒரே ஒரு கடைக்கு மற்றும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 34 | திருமதி.ஜே.கண்ணகி, 50, இராமர் இல்லம், ஜோதி நகர் எக்ஸ்டன்சன், கோபிசெட்டிபாளையம் 98438 72271 | ரூ.1,500/– | **ரூ.1,600/–** | இல்லை |
| | | திரு.கோ,ம.குணசேகரன், த/பெ. மயில்சாமி, 25 வாய்க்கால் வீதி, கோபி, 97887 08885 | ரூ.1,500/. | ரூ.1,525/– | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 34 – க்கு திரு.கோ.ம.குணசேகரன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.1,500/– ஐ விட கூடுதலாக ரூ. 100/– சேர்த்து, திருமதி. ஜே.கண்ணகி என்பவர் மாதவாடகை ரூ.1,600/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 34 – க்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு திருமதி.ஜே.கண்ணகி என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு 1. ஜே.கண்ணகி–ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.324**

6. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 19 கடைகளுக்கு 27.05.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 25, 39, 35, 36, 50, 52, 38, 65, 21
2. **IUDP வாரச்சந்தை கடை எண்.16**
3. வாய்க்கால் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கடை எண். 3
4. புதிய பேருந்து நிலைய காலியிடத்தில் உள்ள இளநீர் கடை.
5. பழைய பேருந்து நிலைய கடை எண். 4
6. பழையாஸ்பத்திரி வீதி கறிக்கடைகளுக்கு கிழபுறம் கிழக்கு பார்த்த கடை எண். 4, 5
7. ராமநாதன் வீதி கடை எண். 2
8. வாய்க்கால் ரோடு பதிவிலாஸ் வீதி கடை எண். 1

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்ட விவரப்படி ஒரே ஒரு கடைக்கு மற்றும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ.. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | IUDP வாரசந்தை கடை எண். 16 | திரு.ஆர்.நாகராஜன் த/பெ. ரங்கசாமி 140, முருகைய்யன் வீதி, அக்கரை கள்ளிப்பட்டி, கோபிசெட்டிபாளையம் வட்டம், 94888 81123 | ரூ.4,359/– | **ரூ.4,700/–** | இல்லை |
| | | திரு.சந்திரன் த/பெ. கருப்புசாமி, 4/109, மணிக்காரர் வீதி, வெள்ளாளபாளையம் (கி) கோபி வட்டம் 82483 64448 | ரூ.4,359/– | ரூ.4,000/– | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1. IUDP வாரசந்தை கடைஎண் 16 – க்கு திரு.சந்திரன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை விட கூடுதலாகவும், ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,359/– ஐ விட கூடுதலாக ரூ. 341/– சேர்த்து, திரு.ஆர்.நாகராஜன் என்பவர் மாதவாடகை ரூ.4,700/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

எனவே IUDP வாரசந்தை கடை எண்.16 – க்கு அளிக்கப்பட்டுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு திரு.ஆர்.நாகராஜன் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(ந.க.எண். 1567/2018/அ3)
**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலக குறிப்பு 1.R.நாகராஜன்–ன் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2. ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.325**

7. இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் KNMT 2022–23 மூலமக ரூ.1.73 கோடி மதிப்பீட்டிற்கு வாரச்சந்தை கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (SS &FC) துறை அரசாணை (4D) எண்.23 நாள்.01.12.2022 ன் படி நிர்வாக அனுமதி மற்றும் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.
அதன் விவரம்

| Sl.No. | Name of the work | Appraisal cost In Crore |
|---|---|---|
| 1 | Construction of weekly market in ward C , TS No.51 , Block no.25 in Gobichettipalayam Municipality | 1.73 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி 01.12.2022 ல் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது, (ந.க.எண்.882/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.326**

8. இந்நகராட்சிக்கு மரபு வழி கழிவுகளை அகற்றுவதற்கு SBM 2.0 திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.19009/2022/SBM –1 நாள்.25.11.2022ன் படி ) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் விவரம்

| **Sl.No.** | **Name of the ULB** | **Quantity of legacy waste in Cu.m** | **Total Population as per 2011** | **Estimate Amount Rs.in crore** | **Funding pattern** |
|---|---|---|---|---|---|
| 1 | Gobichettipalayam | 19461 | 59523 | 1.25 | GOI–50%<br>GOTN–33%<br>ULB Share–17% |

மேற்காண் பணிக்கு நிர்வாக அனுமதி 25.11.2022 ல் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கம் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1725/2022/இ1 )

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.327**

9. இந்நகராட்சியில் பேருந்து நிலையம் மேம்படுத்தும் பணிக்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (SS &FC) துறை அரசாணை (4D) எண்.23 நாள்.01.12.2022 ன் படி வழங்கப்பட்டுள்ளது.
அதன் விவரம்

Rs.in crore

| Sl.No. | Name of the Municipality | Name of the Project | Appraisal | KNMT Share | ULB Share |
|---|---|---|---|---|---|
| 1 | Gobi | Improvement of the Existing Bus stand survey no.46,48 , ward –D, Block – 15 | 0.66 | 0.33 | 0.33 |

மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி 01.12.2022 ல் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது, (ந.க.எண்.1503/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி அளிக்கலாம்
**பதிவு செய்யப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.328**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலையையே கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலையான (ODF+) சான்று பெறுவதற்கு நகராட்சியில் பல்வேறு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக இந்நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலை தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது என்ற சுய உறுதி மொழி சான்றிதழுக்கும் (Self Declaration) இதனை பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகளை பெறுவதற்காக தினசரி நாளிதழிகளில் விளம்பரம் செய்யவும், இதற்காகும் செலவினத்திற்கும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1853/2019/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.329**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் Star Rating என்ற அங்கீகாரத்தை ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சேகரமாகும் திடக் கழிவுகளை திடக் கழிவு மேலாண்மை விதிகளின் படி மட்கும் மற்றும் மட்காத குப்பைகளாக முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. எனவே, கோபிசெட்டிபாளையம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்கும் (Self Declaration) மற்றும் இதனை பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகளை பெறுவதற்காக தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யுவும், இதற்காகும் செலவினத்திற்கும் நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1904/2019/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.330**

12. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 22.11.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 & ஏ பிளாக் 1, சர்வே எண்: 76/1, 79/3 , மின் நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 63,00,000 | **M/s. எஸ்.பி.டி.இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் ஈரோடு** | 0.02 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.டி.எல்லோ சிட்டி பில்டர்ஸ் ஈரோடு . | 1.69 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 2090/2022/ இ1

**அலுவலகக்குறிப்பு :–**

அ).மன்றம் அனுமதிக்கலாம் .

ஆ).மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. எஸ்.பி.டி.இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இ) திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு அ). அனுமதிக்கப்பட்டது**
**ஆ) மற்றும் இ) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.331**

13. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள பணிகளை செய்வதற்கு 23.11.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 & C, பிளாக் 17, சர்வே எண் : 7/1A1 பிருந்தாவன் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் பணி | 40,00,000 | **M/s லோகு கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரர் கோபிசெட்டிபாளையம்.** | 0.39 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எஸ்.பி.டி.இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர் ஈரோடு . | 2.02 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 2090/2022/ இ1

**அலுவலகக்குறிப்பு :–**

1) மன்றம் அனுமதிக்கலாம் .

2) மேற்படி பணிகளில் வ.எண்.1 –க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.லோகு கன்ஸ்ட்ரக்ஷன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

3) திட்டப்பணியாக உள்ளதால் நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2 மற்றும் 3 ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.332**

14. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பழைய தினசரி சந்தை மற்றும் அதனை சுற்றியமைந்திருந்த 33 கடைகளை இடித்து விட்டு, புதிய தினசரி அங்காடி கட்டிடம் கட்டுவதினை எதிர்த்து கடை குத்தகைதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். மேற்படி வழக்கு முடிவடைந்து தற்போது கட்டிட பணிகள் நடைபெற்று வருகிறது. அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் (ADDITIONAL ADVOCATE GENERAL) திரு.எஸ்.ஆர். ராஜகோபால் அவர்கள், மேற்படி வழக்கு விசாரணையில் கீழ்க்கண்ட தேதிகளில் ஆஜரானதற்கு பின்வரும் விவரப்படி 05.12.2022 மற்றும் 07.12.2022 ஆகிய தேதிய கடிதங்களின் படி வழக்கு கட்டணம் வழங்க கோரியுள்ளார்கள்.

| வ.எண் | கடித எண். | வழக்கு எண் | வழக்கு விசாரணையில் ஆஜரான தேதி | வழக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | SB/FB. No. 40/2021 DATED 05.02.2021 | W.P.No. 2609 of 2021 filed by Maulana | 05.02.2021 | ரூ.40.000/– |
| 2 | SB/FB. No. 53/2021 DATED 16.02.2021 | W.P.No. 2609 of 2021 filed by Maulana | 10.02.2021 | ரூ.40.000/– |
| 3 | SB/FB. No. 54/2021 DATED 16.02.2021 | W.P.No. 2609 of 2021 filed by Maulana | 11.02.2021 | ரூ.40.000/– |
| 4 | SB/FB. No. 60/2021 DATED 22.02.2021 | W.P.No. 2609 of 2021 filed by Maulana, W.P.No. 2972 of 2021 filed by A.Mylevakanan | 22.02.2021 | ரூ.40.000/– |
| 5 | SB/FB. No. 74/2021 DATED 26.02.2021 | W.P.No. 2609 of 2021 filed by Maulana, W.P.No. 2972 of 2021 filed by A.Mylevakanan | 24.02.2021 | ரூ.40.000/– |
| 6 | SB/FB. No. 121/2021 DATED 26.02.2021 | W.P.No. 4534 of 2021 filed by M.Seraram and others | 18.03.2021 | ரூ.40.000/– |

மேற்கண்ட விபரப்படி, அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.எஸ்.ஆர்.ராஜகோபால் அவர்களுக்கு வழக்கு கட்டணம் மொத்தம் ரூ.2,40,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வழங்கப்படவேண்டியுள்ளது. மேற்படி தொகை வழங்க அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.எஸ்.ஆர்.ராஜகோபால் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.2,40,000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டியமைக்கு பின்னேற்பு வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண். 2190/2020/அ3)

**அலுவலக குறிப்பு** : மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**

**2 பின்னேற்பு வழங்கப்பட்டது . மன்றத்தீர்மானம் எண்.333**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கடை குத்தகைதாரர்கள் சி.ராமச்சந்திரன் மற்றும் 28 நபர்களால், 2020 ம் ஆண்டில் கொரோனா நோய் தொற்று காலத்தில், ஜுலை 2020 முதல் டிசம்பர் 2020 வரை வாடகை தள்ளுபடி செய்ய கோரி, மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது, வழக்கு எண். W.P.No. 4625 of 2021. மேற்படி வழக்கில் நகராட்சிக்கு சாதமாக தீர்ப்பு வழங்கப்பட்டு, வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்படி வழக்கு தொடர்ந்த அனைத்து குத்தகைதாரர்களிடமும் வாடகை வசூல் செய்யப்பட்டது.

அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.எஸ்.ஆர்.ராஜகோபால் அவர்கள் மேற்படி வழக்கின் விசாரணையில் 18.03.2021 அன்று ஆஜரானதற்கு, வழக்கு கட்டணம் ரூ.40,000/– வழங்க கோரியுள்ளார். (கடித எண். SB/FB No. 125/2021 Dated 23.03.2021. பெறப்பட்ட நாள். 05.12.2022).

மேலும் புதிய பேருந்து நிலைய TNUDF கடை எண். 1 ன் குத்தகைதாரர் திரு.எஸ்.கணேசன் என்பவரால், ஜுலை 2020 முதல் டிசம்பர் 2020 முதல் வாடகை தள்ளுபடி செய்ய கோரி, தனியாக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது, வழக்கு எண். W.P.No. 842 of 2022. மேற்படி வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்.திரு.பி.ஆனந்த் அவர்கள் நகராட்சி சார்பாக எதிர் வாதுரை தாக்கல் செய்து வழக்கு விசாரணையில் ஆஜராகியுள்ளார். மேற்படி வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு, வாடகை முழுவதும் வசூல் செய்யப்பட்டது. அதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/– வழங்கக்கோரி வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்கள் தனது 25.01.2022 ந் தேதிய கடிதத்தின்படி (பெறப்பட்ட நாள் 25.11.2022) கோரியுள்ளார்.

மேற்கண்ட விபரப்படி, அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.எஸ்.ஆர்.ராஜகோபால் அவர்களுக்கு வழக்கு கட்டணம் மொத்தம் ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மற்றும் வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/–(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படவேண்டியுள்ளது. மேற்படி தொகை வழங்க அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே அரசு கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.எஸ்.ஆர்.ராஜகோபால் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.40,000/– மற்றும் வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த் அவர்களுக்கு ரூ.15,000/– ஆக மொத்தம் ரூ.55,000/– நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டியமைக்கு பின்னேற்பு வழங்க, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 419/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2 பின்னேற்பு வழங்கப்பட்டது . மன்றத்தீர்மானம் எண்.334**

16. இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் ஒரு பொது கழிப்பிடம் ( Smart Public Toilet) கட்டுதல் மற்றும் அதன் எதிர்புறம் சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை தினகரன் செய்தித்தாளில் 17.05.2022ல் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.5,624/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை The Sky Ads Erode அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.1090/2022/இ1)

**அலுவலககுறிப்பு:–** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.335**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சி கரட்டூர் உரக்கிடங்கில் செயல்பட்டு வரும் உயிரி எரிவாயு கூடத்தின் கழிவுகளை அரைத்து கூழாக மாற்றம் செய்யும் மின் மோட்டாருடன் பொருத்தப்பட்டுள்ள அலுமினியத்தாலான டிரம்மின் உள் மற்றும் வெளி பகுதி தேய்ந்து துளை ஏற்பட்டு நீர் கசிவு ஏற்படுவதனை சரி செய்து புதிதாக ஆயில் சீல் மாற்றும் பணிக்கு 13.12.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s. Gandhi Motors,<br>K.K.Garden, C.M. Nagar Road,<br>Near K.K.S.K. Leather Factory,<br>R.N. Pudur,<br>Erode – 638 005. | 19,900/– |
| 2. | M/s. Mettupalayam Auto Service Center,<br>P.N. Road,<br>Tiruppur. | 20,000/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Gandhi Motors, K.K.Garden, C.M. Nagar Road, Near K.K.S.K. Leather Factory, R.N. Pudur, Erode – 638005 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். இப்பணிக்கு ஆகும் செலவினம் ரூ. 19,900/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2517/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**3. அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.336**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களை பயன்படுத்தும் பொது மக்கள் கழிப்பிடம் பராமரிப்பது சம்பந்தமான தங்கள் கருத்துகளை QR Code மூலம் பதிவு செய்ய ஒவ்வொரு சமூதாய மற்றும் பொது கழிப்பிடங்களின் QR Code யினை A4 Size இல் Print செய்து இருபுறமும் 2.5 mm தடிமன் கொண்ட Fiber Sheet இல் Laminate செய்து 27 cm X 42 cm நீள அகலம் கொண்ட 5mm தடிமன் கொண்ட போர்டுகளாக தயார் செய்யும் பணிக்கு 29.11.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் டன் ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s. INFA CARD LAND,<br>56A, CUTCHERRY STREET,<br>GOBICHETTIPALAYAM – 638452 | 1000/–<br>+<br>GST 18% |
| 2. | M/s.SRI LAKSHMI BOOK BUNDING AND OFFSET,<br>26A, BHARATHI STREET,<br>GOBICHETTIPALAYAM – 638452 | 1050/–<br>+<br>GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. INFA CARD LAND, 56A, CUTCHERRY STREET, GOBICHETTIPALAYAM – 638452 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 2456/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய M/s. INFA CARD LAND, 56A, CUTCHERRY STREET, GOBICHETTIPALAYAM – 638452 அவர்களுக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.337**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் ராமர் எக்ஸ்டென்சன் மற்றும் கரட்டூரில் செயல்பட்டு வரும் நுண் உரமாக்கல் மையங்களில் மக்கும் குப்பையினை உரமாக்கும் பணிக்கும், RRC, BIO GAS PLANT, சமுதாய மற்றும் பொதுக் கழிப்பறைகள் போன்றவற்றில் கிருமிநாசினம் செய்ய உபயோகப்படுத்தப்படும் Lemon Gross Oil விநியோகம் செய்யும் பணிக்கு 15.12.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் லிட்டர் ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | M/s. Maruthi General Industries, 45, Devapuram, Bhavani – 638 301. | 2600/– + GST 18% |
| 2. | M/s. Sri Raghavendra Industries, 9/138 – 5, Panchu Godown Street, Kamaraj Nagar, Elavamalai Post, Erode – 638 316. | 2,700/– + GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள M/s. Maruthi General Industries, 45, Devapuram, Bhavani – 638 301 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். இப்பணிக்கு தேவைப்படும் 50 லிட்டர் Lemon Gross Oil கொள்முதல் செய்து பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2516/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.
3. இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**3. அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.338**

20. இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளி மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF +) என சான்று பெறுவதற்கும் Garbage Free City 3 Star Rating பெறுவதற்கும் பொதுமக்களிடம் இருந்து ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் 13.12.2022 ஆம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டி 29.11.2022 ஆம் தேதியன்று தினந்தந்தி மற்றும் மாலைமலர் இரண்டு தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டது 13.12.2022 தேதி வரை இது குறித்து யாதொருவரும் ஆட்சேபனைகளோ மற்றும் ஆலோசனைகளோ தெரிவிக்கவில்லை என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1853/2019/எச்1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
**பதிவு செய்யப்பட்டது.மன்றத்தீர்மானம் எண்.339**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2020–21 ஆம் ஆண்டிற்கு உள்ளாட்சி நிதி தணிக்கை செய்தமைக்கான தணிக்கை கட்டணம் ரூ.57,617/– ஐ உரிய அரசுத்தலைப்பில் ( DPC – 0070 – 60 – 110 –AA – 009) செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1389/20/பி3)

**அலுவலக குறிப்பு:–**1.அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.340**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 30 செங்கோட்டையன் காலனி வேதமுத்து வீதியில் நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறு உள்ளது. தற்பொழுது அதில் தண்ணீர் உள்ளது. அங்குள்ள பொதுமக்கள் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்கு பயன்படுத்தும் வகையில் கிணற்றில் உள்ள தண்ணீரை மின் மோட்டார் மூலம் இறைத்து அருகில் உள்ள குடிநீர் தொட்டியில் நிரப்பி பயன்படுத்துவதற்கு கீழ்க்கண்டுள்ள வகையில் பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

1. E.B மின் இணைப்பு பெறுவதற்கு கட்டுமானம் பணிகள் பில்லர் பாக்ஸ் அமைத்தல்
2. E.B சர்வீஸ் ஓயர், மின் மோட்டார் சர்வீஸ் கேபிள் 2 H.P Stater மற்றும் உபகரணங்கள் பொருத்துதல்.
3. WPVC Pipe 1 ¼ Suction 32 mm Delivery சப்ளை செய்து பொருத்துதல்,

மேற்கண்டுள்ள பணிகள் செய்வதற்கு மதிப்பீடு ரூ.35,000/–ஆகும். அத்தொகையினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 07.12.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

**அதன் விவரங்கள் :–**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.21 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.68 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் 0.21 சதவீதம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. M/S சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.341**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண்.21 மணிமேகலை வீதி (படையாச்சி மாரியம்மன் கோவில் வீதி ) மற்றும் வார்டு எண்.22 , குமணன் வீதியில் உள்ள சிறுமின்விசை பம்ப் தொட்டி (HDPE Tank ) பழுதடைந்துள்ளது. மேற்படி பழுதினை சரி செய்ய புதிதாக தொட்டி அமைக்க வேண்டியுள்ளது.

எனவே அலுவலக இருப்பில் உள்ள HDPE Tank பயன்படுத்தி கொண்டு அதன் குழாய் உதிரிபாகங்கள் மாற்றி அமைக்கவும் , வார்டு எண்.29 மற்றும் 30 சந்திப்பில் உடையார் தெரு சங்கரன் விதி சந்திப்பில் உள்ள சிறுமின்விசை பம்பிலிருந்து சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யவும் , வார்டு எண்.18 மற்றும் 19 சந்திப்பில் கொமரப்பன் வீதி பொது கழிப்பிடத்தில் உள்ள செப்டிக் டேங்க் தண்ணீர் வெளியேறும் இடத்தில் சோக்பிட் அமைத்து சுகாதார கேடு விளைவிக்கா வண்ணம் பாதுகாப்பு செய்திட ஆகும் மதிப்பீட்டு தொகை .ரூ,40,000/– குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 07.12.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

**அதன் விவரங்க்ள் :–**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.16 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.63 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் 0.16 சதவீதம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2561/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்,

1. **வார்டு எண்.22 குமணன் வீதி சிறுமின்விசைப்பம்புத்தொட்டி பழுதினை மட்டும் சரி செய்ய புதிதாக தொட்டி அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது.**
2. **ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.342**

24. இந்நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் சமுதாய மற்றும் பொது கழிப்பிடத்தில் தேவையான அத்தியாவசிய வசதிகள் மற்றும் பழுதுகள் சரிசெய்ய பொது சுகாதார பிரிவில் தெரிவித்துள்ளபடி, மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு ODF மற்றும் GFC (3STAR) சான்று வழங்க கள ஆய்வுக்காக வர உள்ளதால் இப்பணியை அத்தியாவசியமாக கருதி ஒவ்வொரு கழிப்பிடத்திற்கும் பெயர் பலகை மற்றும் கழிப்பிடத்திற்கு செல்லும் வழி என்ற பலகை பொருத்த தண்ணீர் வசதி, மின் விளக்கு வசதி, வாக்ஷ்பேசன் வசதி, கழிவறையின் கதவுகள் மாற்றி அமைத்தல், பழுதான கதவுகள் பழுது நீக்குதல், பழுதான இன்டியன் சிளஸ்அவுட், பழுதான சுவர்கள் பழுது நீக்குதல், குழாய் பழுதுகள் நீக்குதல் போன்ற அத்தியாவசிய பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000/–ஆகும். அச்செலவினதொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி 20.12.2022 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

**அதன் விவரங்க்ள் :–**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| 2. | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.55 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கியுள்ள M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் 0.22 சதவீதம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2535/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு 1.M/S. சஞ்சய் எலெக்ட்ரிக்கல்ஸ் – ன் ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**
**2. ஏற்றுக்கொள்ளப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.343**

25. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.109 நாள்.30.05.2022 ன் படி இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணியினை செய்வதற்கு 16.12.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி முருகன்புதூர் , நகராட்சி டவுன் நடுநிலைப்பள்ளி , ஜெயராம் நகராட்சி நடுநிலைப்பள்ளி, நகரவை மேல்நிலைப்பள்ளி மொடச்சூர் , வேங்கம்மையார் உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் நாப்கின் incinerator வாங்கி பொருத்தும் பணி | 3,00,900 | **M/s.AKD எண்டர்பிரைசஸ் காஞ்சிபுரம்** | **0.25** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | **M/s.UTHSEV TRADERS கோயமுத்தூர்** | **1.20** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

ந.க.எண். 668/2022 /எச்1

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s.AKD எண்டர்பிரைசஸ் காஞ்சிபுரம்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதிக்கப்பட்டது**
**2.M/S.AKD எண்டர்பிரைசஸ் –ன் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது. மன்றத்தீர்மானம் எண்.344**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி